Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.— குறள்.

VOL, I. { புதுவை, ஸ்ரீமுக௵ மார்கழி ௴ ௨௮ ௳ (11—1—34) } No. 7

சுந்தரர் தேவாரம்

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்விலுங்தோண்டர்தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ்சோறுங் கூறையுமேத்தலாமிடர்கெடலுமாம்
அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.

மிடுக்கிலாதானைவீமனேவிறல்விசயனேவில்லுக்கிவனென்று
கொடுக்கிலாதானைப்பாரியேயென்றுகூறினுங்கொடுப்பாரில்லைப்
பொடிக்கொள்மேனியெம்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அடுக்குமேலமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.

நரைகள்போந்துமெய்தளர்ந்துமூத்துடல்நடுங்கிநிற்குமிக்கிழவனை
வரைகள்போல்திரடோளனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரிலைப்
புரைவெள்ளேறுடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அரையனுயமருலசமாள்வதற்கியாதுமையுறவில்லையே.

உ
திருவருள் துணை.

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை,
ஸ்ரீமுக மார்கழி மீ 28உ

இருக்கு வேதம்

கடவுள் அருளைப் பூரணமாகப் பெற்ற இருடிகள் முனிவர்களால் சம்ஸ்கிருத பாஷையில் அருளிச் செய்யப்பட்டு வியாசமுனிவரால் வகுக்கப்பட்ட வேதநூல்கள் இருக்கு—யசுர் — சாமம் — அதர்வம் என்று கூறப்படும். எழுதாமறை என்னும் வாய்மையான வேதத்தை அநுபவமாகக் கண்டுணர்ந்த மெய்யடியார்வாயிலாக வெளிப்பட்டு அவ்வேதஉண்மையையே தம் அகத்துக் கொண்டு நிறைமுறை நிகழும் கற்பனை வடிவினவாய்ச் சிவர்கள் பக்குவம் நோக்கி அமைந்துள்ள இத்தகைய அரிய பெரிய நூல்களும் வேத நாமத்தால் உபசரித்துப் போற்றப்படுவன ஆயின. உண்மையை அநுபவமாகக் கண்டுணர்ந்த பெரியோர் வாக்குக்கள் பாஷையால் வேறுபாடுடையனவாய்த் தோன்றினும் பொருளால் ஒற்றுமை உடையனவாதலே இயற்கை முறையாகும். என்னை? அவர் தம் சிவாநுபவக் காட்சிகள் ஒன்றேயாதலின் என்க. முத்திநெறியில் செல்லுதற்கண் உளவாகும் அநுபவங்களைக் கூறுதலோடு வாய்மையான சாதக யோகங்களால் அவற்றை அடைதற்கு ஏற்ற குருநெறி ஒன்று உண்டு எனவும் அதனையாவரும் அடைந்தே உய்திபெற வேண்டும் எனவும் இந்நூல்கள் வற்புறுத்துக் கூறுகின்றன. பிணி மூப்புச்சாக்காடுகட்கும் பிறவிக்கும் அஞ்சி நித்தியத்துவம் அடைதற்கு ஏற்ற குருநெறிகண்டு உய்திபெற்ற மெய்யடியார் அத்தகைய குருநெறியாகிய முத்திநெறியில் காணப்பெற்ற அநுபவ உண்மைகளை அருளியமையோடு அக் குருநெறியால் அன்றிப் பிறநெறியால் உய்தி அடையமுடியாதுஎனவும் அருளிப்போந்ததன்காரணந்தான்என்னை?

"நான் பெற்ற இன்பம்
பெறுக இவ் வையகம்"

(திருமந்திரம் திருமூலர் வரலாறு செ.13)

என்றவாறு சிவர்கள் மாட்டு வைத்த கருணையினால் அல்லவா? ஆதலால் உண்மையை உணரும் ஆற்றலும் காதலும் உடையோர் யாவரும் பாஷைத் துவேஷம் இன்றித் திருவருட் சகாயத்தால் இந் நூல்களை ஓதி உணர்தல் அவசியமே யாகும். குருவருளாலன்றி இவற்றின்உண்மைப்பொருளை அறிதல் முடியாத காரியமே.

சம்ஸ்கிருத வேதநூல் வரிசையில் முதலில் வைத்துப் போற்றப்படுவது "இருக்கு" வேதமே. வாய்மையான இருக்கின் பெயரே இம்மறைத் தொகுதிக்கும் உபசாரமாய் அமைந்துள்ளது. ஞானசம்பந்தப் பெருமான் அருளிய தமிழ்வேதப் பதிகங்களுள்ளே சில பதிகங்கள் "திரு இருக்குக் குறள்" என வாய்மையான இருக்கின் பெயர் கொண்டு வழங்குதலும் அறிக. வாய்மையான இருக்கு என்னும் தத்துவ இயல்பு பின்வரும் திருமந்திரச் செய்யுட்களால் நன்கு புலப்படும்.

திருமந்திரம்

இருக்குரு வாமெழில்
வேதத்தி னுள்ளே
உருக்குணர் வாயுணர்
வேதத்து ளோங்கி
வெருக்குரு வாகிய
வேதியர் சொல்லுங்
கருக்குரு வாய்நின்ற
கண்ணனு மாமே.

(ஷை வேதச் சிறப்பு செ. 3.)

இருக்கி விருக்கு
மெண்ணிலி கோடி
யருக்கின்ற மூலத்து
ளங்கே யிருக்கும்
அருக்கனுஞ் சோமனு
மாரழல் வீச
உருக்கி யுரோம
மொளிவிடுந் தானே

(ஷை திருமூலர் வரலாறு. செ. 21.)

சத்தி வடிவாகிய நமது தூலம் அமலமடைதற்கண் உள்ள ஒரு நிலையே—தத்துவமே "இருக்கு" என்பது இவற்றால் நன்கு புலப்படும். இவ் உண்மை அமயம் நேரும்போது விளக்கிக் கூறப்படும்.

இருக்கு என்னும் திருநாமம்பூண்டு வழங்கும் சம்ஸ்கிருத வேதநூலில் நாம் அறியவேண்டியன அனைத்தும் இருக்கின்றன என்பது மிகையன்று. இந்நூல் அறிஞர் சிலரால் தமிழில் மொழிபெயர்த்துப் பாக்களாக ஆக்கப்பட்டுள்ளது. ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்த நிறை முறை நிகழும் உண்மைக் கற்பனைகளால் "ஐ"காரத்தை உருவகப் படுத்திச் சாந்த தநு கோர தநு என்னும் இரண்டற்கும் இடையே நிகழ்ந்த யுத்தத்தையும், யாகம் என்பதன் உண்மைப் பொருளையும், அகப்பொருள் உண்மை இன்

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

னது என்பதனையும் இவ் வேத நூல் இனிது விளக்கி இயலுமீ திறனை என்னென்று புகழ்ந்து கூறுவது? சாந்த தநு கோர தநு என்றால் என்னை? அவைதாம் அமல தநுவும் அசுத்த தநுவாகிய மருளுடம்புமாகும். பிணி மூப்புச் சாக்காடுகளுக்கு இடமாகிய அசுத்த சரீரம் என்னும் மருளுடம்பை எம்பெருமான் பூரணமாகக் குடிபுகுந்து நிலையாய் இருத்தற்கு உரிய அமலதநுவாக மாற்றுதலே இருடிகள்—முனிவர்கள்—மெய்யடியார்கள் புரியும் அருந் தவமாகும்—குரு நெறியாகிய முத்தி நெறியாகும். இவ் அருந் தவம் புரிந்து மாறிப் பிறத்தற்கண் அடையப்பட்ட அளவிறந்த துன்பங்களே சாந்த தநு கோர தநு என்னும் இரண்டற்கும் இடையே நிகழ்ந்த அரிய பெரிய யுத்தம் என்னும் கற்பனையால் மறை பொருளாகக் கூறப்பட்டனவாகும். சுரர், அசுரர், தஸ்யுக்கள், சிம்யுக்கள் என்னும் பரிபாஷைகள் நமது சரீரத்திலுள்ள சுத்தமும் அசுத்தமுமான கருக்களையே குறித்தனவாகும். அன்றி, சாதியாளர் சிலருக்கு இடையே நிகழ்ந்த உலகியலான யுத்தத்தையே இவ் அரிய பெரிய வேத நூல்கள் கூறுதற்கு எழுந்தன என்பது ஒரு சிறிதும் ஒவ்வாது. இது நூலப் பொருளாகிய போலிப் பொருளேயன்றி உண்மைப் பொருளன்று என அறிக.

நமது தேகத்தில் தேவர் பலரும் அசுரரும் இருக்கும் உண்மையைச் சூத சங்கிதையில் (பல தேவரும் தேகத்தில் இருக்கும் வகையை உரைத்த அத்தியாயம், செ. 1—16.) கண்டு தெளிக. சீவர்கள் சாவா உடம்பு பெற்று நித்தியத்துவம் அடைதலே முத்தி நெறி என்பதை உணர்த்தும் இருக்கு வேதப் பாட்டுக்கள் சில இங்கே காட்டப்படுகின்றன:

அஷ்டகம் 1; அத்தியாயம் 6; மண்டலம் 1; அநுவாகம் 14; சூக்தம் 4; இருக்குக்கள் 6; வருக்கம் 15.

அழிவிலாத் தன்மை யெங்கட்
களிக்க மீத்துதியேய் வேந்தன்
அழிவிலாத் தன்மை யெங்கட்
களிக்க வெப்பொருள் சார்பூடன்
அழிவிலாத் தன்மை யெங்கட்
களிக்கவா ரழியாத் தார்க்யன்
அழிவிலாத் தன்மை யெங்கட்
களிக்கமா மறைக் கர்த்தாவே. (6).

தேவர்காளெம் மெய்கெட்டுச்
சரையினைச் சேர நூறு
தாவரு கூதிராகுத் தடைபெற
விடையினஃதை
ஓவுறச் செய்யீருன்னு
மதற்குளெம்மகார்கடாமே
மேவுறு பிதாக்களாகு
மேன்மையை யடைவா ரன்றே. (9)

அஷ்டகம் 1; அத்தியாயம் 6; மண்டலம் 1; அநுவாகம் 14; சூக்தம் 7; இருக்குக்கள் 23; வருக்கம் 18.

சோமயாமர
ணத்தினைத் தோய்வுறு
தேமமாக
வுலகிலிருப்பது
காமுறு நற்
றுதியிற் களித்திடும்
வாமகானப் பதியுன்
வசத்ததே. (6)

இவ் வேத வாக்கியங்களின் அருமை பெருமைகள் அளவிடற்கு அரியன. "சோமம்" என்றால் என்னை? அது தான் சோமபானம் எனப்படுவது. சோமன், இந்து, விந்து, சந்திரன் என்பன ஒன்றே. மெய்யடியார் உடலமாகிய விமல தநுவில் சந்திர மண்டலத்தில் ஊறும் அமுதம் எனப்படுவது இதுவே. இவ் அமுதம் உண்ணும் மெய்யடியார் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி நித்தியத்துவம் அடைவர் என்பது தத்துவப் பெரியார் துணிபும் வேத முடிபும் ஆம். மெய்யடியார் எல்லாம் சாதக யோகங்களால் தமது சரீரம் விமலம் அடையப் பெற்று அவ் விமல தநுவாகிய காயத்துள் ஊறுவதாகிய எம்பெருமான் வடிவம் எனப்படும், இத்தகைய அமுதம் உண்டே நித்தியத்துவம் அடைந்தவர் ஆவர். ஆலம் அமுதமானால் காலனை வென்றிடலாம் என்னும் வேத உண்மை இதுவே. பின்வரும் பிரமாணங்கள் சோமம் என்னும் அமுத இயல்பை நன்கு புலப்படுத்தும்.

திருமந்திரம்

கால்கொண்டு கட்டிக்
கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன்
முகம்பற்றி யுண்ணுந்தோர்
மால்கொண்டு தேறலை
யுண்ணு மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய்
வேந்தன் கடனே.
(ஷை 1-ம். தந். இராச தோடம் செ. 9.)

ஊனூறல் பாயு
முயர்வரை யுச்சிமேல்
வானூறல் பாயும்
வகையறி வாரில்லை
வானூறல் பாயும்
வகையறி வாளர்க்குத்
தேனூற லுண்டு
தெளிதலு மாமே.
(ஷை 3-ம். தந். கேசரியோகம், செ. 6.)

திருவாசகம்.

"...
காயத்துள் அமுது
ஊற ஊற நீ கண்டு கொள்
என்று காட்டிய
சேய மாமலர்ச்
சேவ டிக்கணம்
சென்னி மன்னித்திகழுமே.
(ஷை சென்னிப்பத்து செ. 5)

"...
தேனை ஆன் நெயைக்
கரும்பினின் தேறலைச் சிவனை
(ஷை திருச்சதகம். செ. 38.

கந்தரலங்காரம்

பெரும்பைம்பு னத்தினுட் சிற்றேனல்
காக்கின்ற பேதை கொங்கை
விரும்புங்குமரனை மெய்யன்பி
னன் மெல்ல மெல்ல வுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந்
தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச் செந்
தேனும் புளித்தறக் கைத்ததுவே செ. 6.

சோமம், அமுதம் கள், தேன், சிவானந்தத்தேறல், பரமானந்தம் என்பன

ஒன்றே. இவ் அமுதத்தையே "காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்" என்றார். "சித்தாந்த சாத்திரங்கள்" என வழங்குவன வற்றுள் மிகச் சிறந்ததாகிய "திருவுந்தியார்" என்னும் நூலை அருளிய உய்யவந்த தேவர் என்னும் பெரியார்.

திருவுந்தியார்

காயத்துண் மெய்ஞ்ஞானக்
    கள்ளுண்ணமாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென்
    றுந்தீ பற
வறட்டுப் பசுக்களென்
    றுந்தீ பற.........செ. 43.

வறட்டுப் பசுக்கள் — பால் என்னும் அமுதம் அளிக்க முடியாத மலட்டுப் பசுக்கள் — பிணமாகி விழுதற்குரிய அசுத்த சரீரமாகிய மருளுடம்பு உடையவர் என்பது. அசுத்த தநுவாகிய மலதநுவில்— நச்சுச் சரீரத்தில் அமுதம் ஊற முடியாது. இவ் அசுத்தமாகிய மலம் பரிபாகம் அடையவேண்டும்—விமலமாக வேண்டும். அப்பொழுது தான் "மெய்ஞ்ஞானக்கள்" என்னும் ஞானப்பால் உண்ணப்படும். அமல முதற்படிப்பேறு இதுவே. அமல முதற்படியை அடைதலாகிய விமல தநுவை அடையப் பெறுதலையே "சிதையை வந்திப்போம்" என்னும் கற்பனையால் கூறியது இருக்கு வேதம் என அறிதல் வேண்டும். அவ் அரிய பெரிய சூக்தங்கள் இங்கே காட்டப் படுகின்றன.

இருக்கு

அஷ்டகம் 3; அத். 8; வருக்கம்8; மண்டலம் 4; அநுவாகம் 5; சூக்தம் 12

அண்மையிற் சவுபாக்கிய
    மடைக்தவ் வுறக்
ஒண்மையா றுனைச் சிதையே
    வந்திப்போ மொளிசார்
திண்மை நற்பொருளளித்து
    நற்பலனினைச் சேர்த்து
வண்மையோடெமை
    மகிழ்விக்கும் காவத்து மகிழ்க்கே.

இந்திரன் பிடித்திடுகவிச்
    சிதையைப் பூடன்
அந்திலன்னதைச்
    செவ்வனே யமைக்க வவ்வான
முந்துபாவிசேனு டெங்களை
    யளித்திட முறையே
எந்த வாண்டு மேராளமா
    யியைகுவோன் கறக்க.

ஷை வருக்கம் 9. சூக்தம் 13.

"சமுத்திர நின்று மூர்மி
    மதுவினிற் சார்ந்தெழுந்த
தமைத்தண்டோடு மஃதே
    யமுதமாயிற்று நெய்யின்
நிமித்தமாங் கூடநாம
    நேர்ந்ததாய்த் தேவர்களுக்கே
சமைத்த நன்னுபியாகுங்
    தயங்குமிவ் வமுதத்துக்கே.

இவ் வாக்கியங்கள் சாமானியமான பொருளுடையன வல்ல. இதன் தத்துவத்தை அறிவது என்றால் அதனை அடைந்தவருக்கேயன்றி, ஏனையோர் எத்துணை நுண்ணறிவு படைத்தவரே ஆயினும் அவருக்கு முடியாத காரியமே. ஆ! ஆ! என்ன அருமையான வேத உண்மைகள் எல்லாம் மறை பொருளாயும் அவற்றைச் சிறிது கண்டவர்க்கு வெளிப்படையாயும் புலப்படுமாறு மிக உன்னதமாகிய சத்தியநெறி என்னும் அவ் உண்மை நெறியைத் தம்மகத்துக்கொண்டு மிளிர்கின்றன அரிய பெரிய இருடிவாக்கியங்கள்! இவ்விருடிகள் முனிவர்களாகியமெய்யடியார் கருணை வியக்கற்பாலதன்றோ! இத்தகைய வேத உண்மைகளைப் பக்குவம் இல்லாதவர் படிக்கக் கூடாதென விதிக்கப்பட்டது உண்மையிலும் உண்மையல்லவா? பிட்டுக்கு மண்சுமந்தவனும், சுந்தரமூர்த்திக்காகப் பரவையிடம் தூது சென்றவனுமாகிய அப்பன் யாவற்றுக்கும் திறவுகோல் ஒன்று அருளியிருக்கின்றான். அத்திறவுகோல்தான் என்னை? அது தான் அகப்பொருள் உண்மையுணர்த்தும் வேதநூல். மணிவாசகக் கோவையின் இலக்கணம் கூறுவது "இறையனார் அகப்பொருள்" என்பது அதன் திருநாமம். இந்நூலை எல்லோரும் அறிவர். எனினும் இதன் உண்மைப் பொருளை அறிவது எளிதன்று. நான்கு வேதப்பொருளும் அகப்பொருளுண்மையும் ஒன்றே என்பதில் ஐயமில்லை. விரிப்பிற் பெருகும். அமயம்நேரும்போது விரித்துக் கூறப்படும்.

இதுகாறும் கூறியவைகளால் "இருக்கு" என்னும் திருநாமம் பூண்ட சம்ஸ்கிருத வேதநூல் அரிய பெரிய வேத உண்மைகளையே மறை பொருளாகக் கூறுவது என்பதும் குருவருளால் அன்றி அவ் உண்மைகளை அறிதல் முடியாத காரியம் என்பதும் ஒருவாறு காட்டப்பட்டன.

சுபம்!

உடம்பின் அருமை பெருமை

[6-வது வாரத்தொடர்ச்சி]

இருவினையும் சமப்பட்ட இடமே அமல ஒளியாகிய சத்துவம் பொலியும் இடமாகும். இதுதான் வாய்மையான சத்துவம். உலகத்தை வசஞ் செய்வதும் இதுவே. இதனை அறியாதார் கோபம் முதலிய குணங்கள் ஒழியவேண்டும் என வாளா பிதற்றி மரங்கள் கற்களின் தன்மையை அடைந்து சாதலடைந்தனர் — சாதலடைகின்றனர். இருவினையும் சமப்பட்டு உண்மைச் சத்துவம் வாய்க்கப் பெற்று அமலமடைந்த உடலம்— மெய் எவ்வாற்றானும் பூமியுட் புதைக்கப்படும்படியும் கட்டையில் வைத்துச்சுட்டு விடும்படியும் பிணமாகி வீழ்ந்து பொய்யாகுமா? ஆகாது! ஆகாது! பொய்மையாகிய பாசம்—அழுக்கு—மாயை நீங்கிச் சிவம் என்னும் செம்பொருள் விளக்கமடையப் பெறாத பொய்ம்மை யாளர் உடல்களே எவ்வாற்றானும் நிலத்துட் புதைக்கும்படியும் நெருப்பால் எரித்துவிடும்படியும் பிணமாகி வீழ்ந்து பொய்யாகும் என்க. அருமை பெருமை வாய்ந்த இவ் உடலை எம்பெரு

மானுக்கு இடமாக்காது--மால் விடை
யாக்காது —பூந்துருத்தியாக்காது,
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்து
வேடம் முதலிய பூண்டு நடித்து
மாண்டு போகின்றவரையே "பொய்ம்
மையாளர்" என்றும் "முத்தி நெறி
யறியாத மூர்க்கர்" என்றும் பணித்
தருளினார்கள் எமது சமயாசாரிய
மூர்த்திகள். சரீரத்தின் அருமை
பெருமையையும் தெய்வீகத்தையும்
நன்கு புலப்படுத்தும் பிரபல பிரமா
ணங்கள் சில ஈண்டுக் காட்டப்
படுகின்றன.

திருமந்திரம்

மானிட ராக்கை வடிவு சிவலிங்க
மானிட ராக்கை வடிவு சிதம்பர
மானிட ராக்கை வடிவு சதாசிவ
மானிட ராக்கை வடிவு திருக்கூத்தே.
(ஷை. 7—தந் – பிண்டலிங்கம் செ. 1)

சூதசங்கிதை.

பல தேவர்களும் தேகத்தி லிருக்கும் வகையைஉரைத்த அத்தியாயம்.

(கலி விருத்தம்)

திருவ மார்சிவ ஞானச் சிறப்பினர்
சருவவே தாந்த சங்கிரகஞ் சொற்ற
மருவு தேகத்து வானவர் யாவரும்
ஒருவு றுதற வும்பகுத்தோதுவாம். 1.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

பஞ்சபூத சோருபமாகிய தேகத்திற்
பாரறநீவிஞ்சமருத்து வெளியென்ன
விளம்பைம் பூத பாகத்திற், கஞ்சன் மாய
னுருத்திரனற் காமர்ம யேசன் சதாசிவ
னென், றஞ்சுதேவர்களுமுறையேயமர்வா
ரென்ப ரறிவுடையோர். 2.

மெய்யின் புறத்து மிக்கபுகழ் விளங்கு
விராட்டு முன்னிடத்துப், பொய்யில் சுரா
ட்டு மத்தியிற்சம் ராட்டும் பொற்ப வுறைந்
திடுவார், செய்ய சுரோத்தி ரந்தொக்கு
நேத்திரம் சிங்குவை கிராணமிவற், றைய
திக்குவளிகதிர் நீராசு புவிதம்மிடு
முறையே. 3.

பாதம் பாணி வாக்குபத்தம் பன்னு
குதமிவ் வைந்திடத்தும், பேர்த முடை
யோ ரேர்ஞ்ஞான்றும் புகழ்ந்திரிவிக்கிர
மனே, சித மலர்க்கற் பகரீழற்றெய்வ
வேந்த னழற் செல்வன், காதற் பிரசா
பதிமித்திரன் முறையினிவர்கள்கலந்துறை
வார். (4).

பிராணன் றனிற்சூத் திரான்மாவும்
பேசுமந்தக் கரணத்தில், விராவிரணிய
கருப்பனுஞ் சேர்மேவு மனத்திற் சந்திர
னும், பராவு புத்தியிற்றேவர் பல
ரும் வணங்கு மாசானும், ஓராமலுறைவா
ரென்றுரைப்பா ருண்மை யுணர்ந்த வண்
மையரே. (5).

மருவு மகங்கா ரத்திலொளி வளர்
காலத்தியுருத்திரனும், ஒரு விலாத சித்
தத்திலும்பரேத்தித் தொழு சிவனும்,
பெருகு முரோமங்களிலற்ப தெய்வங்
களும் பேசத்திகளில், வெருவு பூத பிரே
தாதிகளு மெஞ்ஞான்றும் விழைந்துறை
வார். (6).

தசையிற்பைசா சமுமிராக்க தருந்த
தசையு நரம்புகளிற், பசைசேர் தொக்கு
நெய்த்தோர் முன்னன பலவற்றினும்
பண்பா, ரிஷையார் தருகந்தருவாதியிமை
யோர் களுநன் குறைவால், வசைதீர்ந்
துயர்ந்து பொறி செற்று மலமா சகற்றி
நின்றீரே (7)

வலப்பானயனத்தகஞ் செந்தாமரை
யோன் கோரதனுவுமிட, நலப்பானயனத்
தகஞ்சார்ந்தனுவு நாளுங் குடி கொள்ளும்,
வலப்பானயனப்புற நறுந்தா மரைகளலர்த்
துங் கதிருமிட, நலப்பா னயனப் புறங்கு
முத மலர்த்துங் கதிரு நன் றுறையும். (8)

களத்தின் புறத்து மாயவன்றன் கோர
தனுவுங்களையகத்து, வளத்தின் மிகுந்து
வருசாந்தகனுவு மருவு மிருதயத்துள்,
அளத்தன் முடியாவுருத்திரன்றன் சாந்த
தனுவு மவிர் புறத்தில், விளர்ப்பிலாத
மெய்யறிவீர் கோரதனுவும் மேவுமே (9).

பிரமரந் திரத்திற் சச்சிதானந்த பிரமம்
வைகும். வாமுறு சிவ சிற்சத்தி மூலாதா
ரத்து வைகும், பரவுறு மாயா சத்திபகர்
நதனுனியின் வைகும், விரவுறு நாதரூப
பராசத்தி நுதனண்மேவும். (10).

புருவமத்தியத்து விந்துச் சத்தியும்
பொலிசிவான்மா, மருவுருக்குமருபந்தான்
விந்து மத்தியினுமற்றை, இருதய நடுவண்
லே ரூபமு மிவ்விரண்டிற், கொருவரு
நடுவணே மத்திய மரூபமுமுற்றோங்கும்.
(11).

செய்யசா றனியின் வெண்டாமரை
மலர்ச்செல்வி சேர்வாள், ஐயவ காக தத்தி
னலே கடற் பிறந்தாள் வாழ்வாள், மைய
வாங் கருங்கட் செவ்வாய்ப் பார்ப்பதி
வயங்கா நின்ற, மெய்யுருத்திரனிருக்கு
மிடத்துற மேவு வாளால் (12).

கோச்சகக்கலிப்பா.

நிருமலமாய் நித்தியமாய் நிரஞ்சனமாய்
நிகரிலதாய், அருவமுமாயுருவமுமா
யருவுருவுமா யொளிரும், சருவ காரண
மானதற்பாரதத் துவசிவந்தான்,இருவினை
தீர் மாதவத்தி ரெக்கும் வியாபித்திருக்
கும் (13).

அறுசீரடியாசிரிய விருத்தம்.

வரத்தவித் தெய்வ மெல்லா மாண்ட
ஞானியருடம்பில், பிரத்தியக் கான்ம
ரூபமாகியும் பேணுகின்ற, சாத்தனிரூப
மாயும் துலங்குவ வெந்த ஞான்றும், காத்
தமர் கமண்டலத்தீர் கரிசறவுணர்ந்து
கொண்மின் (14).

கோச்சகக் கலிப்பா.

சுத்தராய் மறை மார்க்க நிரதராய்த்
துலங்குவோர், உத்தமரே கத்தமா வுருவ
மாய் விளங்குமவை, பெத்த மிகு மற்றை
யர்தம் பேருடம்பினுங்கலந்தே, ஒத்
துறையு மெய்ஞ்ஞான்று மொளிராவா
லென்றுணர்வீர் (15).

எல்லார்தம் முடம்பிடத்து மெல்லாத்
தெய் வங்களுஞ்சேர், மல்லாருந்திரோ பூத
மாயிருக்கு மாண்பினால், ஒல்லாவோர்
பிராணிக்கு முழலவமாணம்புரிதல்,
பொல்லாத கடியவசனம்பு கறல்கூடாதே
(16).

அத்திர சத்திர முகிராதிகளினு லடர்க்
கெதிர்ந்து, நெய்த்தோருண்ணின் றொழப்
புண்ணிறுவதல் கூடாதம்ம, எய்த்திரங்
கப் பிராணிகளுக்கிடையூறு செய்திடு
வோன், கொத்தழலார் வெந்நரயக் குழி
வீழ்வதுண்மையே. (17).

பரர்படிவத் திடையேனும் தன்படிவத்
திடையேனும், விரவுசக்க ரர்திகளாலங்

நிதமே வப்புரிவோன், நரகடைவர்னென் றுரைக்கு நன்னூல்களெந் நூலும், விர னினுணர்ந்துயர் சைவ மெய்நூலின் வழி நின்றீர். (18)

அறுசீரடியாசிரிய விருத்தம்.

ஆதலாற் போக மோக்க மடைதக வெண்ணினோர்கள், காதல்செய் யுடல்க டெய்வ மய மெனக் கருத்தி னோர்ந்து, நீதமை யூறு செய்யாதவப் புறச் செய்ய வேண்டும், மேதக வுணர்ந்து கொண்மின் மெய்த்தவம் பூண்டு நின்றீர். (19)

மேலே கூறிய பிரமாணங்களால் பஞ்ச பூதமே பஞ்சப்பிரமம் பஞ்ச மூர்த்திகள்(இருக்குவேதம்)ஆதலால், தேவகணம், பூதகணம், ராக்ஷஸகணம். துர்க்கைகள் முதலிய பலதெய்வங்கள் என்னும் கருக்கள் (தத்துவங்கள்) கூட்டுறவினல் கட்டப்பட்டு உருத் தோற்றமாயது இவ்யாக்கை என்பது நன்கு பெறப்படும். பஞ்ச மூர்த்திகளும் ஆறுசத்திகளும் அட்டமூர்த்திகளும் கூடி உடல் உயிராயின என்பதும், உடலின் அருமை பெருமையும் பின்வரும் ஔவையார் திருவாக்காலும் பசுமரத்தாணி போல் நன்று உறுதிப்படுத்தப் பட்டமை கண்டு கொள்க.

ஔவை குறள்

வீட்டு நெறிப்பால்

பிறப்பினிலைமை

மாயன் பிரம னுருத்திரன் மகேசனோ
டாயுஞ் சிவமூர்த்தி யைந்து. (6)

மாலய னங்கி யிரவிமதி யுமையோ
டேறுந் திகழ் சத்தி யாறு. (7)

மண்ணொடு நீரங்கி மதியொடு காற்றிரவி
விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு(9)

"இவையெல்லாங்கூடியுடம்பாயவொன்றி
னவை யெல்லா மானது வித்து.

உடம்பின் பயன்.

உணர்வாவ தெல்லா முடம்பின் பயனே
உணர்ந்துணர் வுடையார்.

ஒரு பய னுவ துடம்பின் பயனே
தருபயனுஞ் சங்கானேச் சார். (5)

ஓசை யுணர்வுக ளெல்லாந் தருவிக்கும்
நேசத்தாலாய வுடப்பு. (7)

அன்னத்தா லாய வுடம்பின் பயனெல்லா
முன்னோனைக் காட்டி விடும். (10)

இவ்வுண்மையை நூன் முகமாக அறிந்த ஒருவன் இத்தூலம் சத்துக் கெட்டுப் பிணிவியலடைந்து அழிந்து போக மனந்துணிவானோ? துணிவனெனின், கொலைஞனும், கள்வனும், புலையனும் அவனன்றி வேறுயார்? உண்மை எங்கோ இருப்ப அதனை உணரும் ஆற்றலும் காதலும் இல்லாது எது எதுவோ உழறிக்குழறிக் கலாம் விளைத்துச் சாதலடையும் தற்காலக் குழவிகளின் அறியாமையை—சீர்த்திருத்தக் காரரின் மதிப் பொலிவை என்னென்று கூறுவது? இவர்கள் கண்டு பிடித்துக் கையாண்டு வரும் கொள்கைகள் அனைத்தும் தங்கள் தங்கள் யாக்கையில்இருக்கும் கோரதனுக்கள் என்னும் அசுரர்களையே தக்க உணவுகொடுத்து வளர்ப்பதற்கே ஏற்றனவாயினவன்றோ! அவ் அசுரர்கள் (அசுத்த நிறை) என்னும் ஈனர்களையே—ராக்ஷஸர்களையே போற்றி வளர்க்கின்றார்கள். ஆயினும் உண்மையைக் கண்டு அதனையே கடைப் பிடித்து ஒழுகுவோர்களாகவும் துணிந்துகொண்டார்கள். இத்துணை மகத்துவம் வாய்ந்த—அருமை பெருமை வாய்ந்த யாக்கைவசப்படுத்துவது என்றால், எளிதாகுமா? இவ்வுடம்பின் அருமை பெருமையை நன்குணர்ந்த நமது மூதாதைகளான தத்துவப் பெரியார்—இருடிகள்—முனிவர்கள்—சித்தர்கள்—மெய்யடியார் எத்துணையோ கஷ்டங்களை அடைந்து வாய்மையான இயம நியமங்களையும்இருப்பு உயிர் நிலை பிரத்தியாகாரம் தாரணை தியானம் என்பவைகளையும் அநுட்டித்து "தான் அவன் ஆகும்" உண்மைச் சமாதி கைகூடி உலகு கண்டு போற்ற மறைந்து உண்மை முத்தியடைந்தார்கள். உடல் அமலமடைய அடைய உணர்ச்சியும் அமலமடையும். உடம்பு மாற்ற மடைந்தாலன்றி—அமல மடைந்தாலன்றி உயிர் அமலமடையாது என்பது சொல்லாமலே அமையும். உடம்பு பிணி முதலியவற்றால் பழுதடைந்து பிணமானால்—செத்தால் உணர்ச்சி—உயிர் எவ்வாறாகும் என்பதை அறிஞர் உய்த்துணர்க. (தொடரும்).

"வித்தகம்"

பெற்ற

மதிப்புரை.

அன்புருவாய ஐயா!

"வித்தகம்" என்னும் உத்தம போதப் பத்திரிகை வரப்பெற்றேன். அஃது, இத்தரைமக்கள் வாழ்க்கையினெய்தற் பாலனவாகிய அறம் பொருளின்பக்கூறுபாடுகளையும், சதேக முத்திக்குரிய நன்னெறியினையும் நவில் தொறும் இன்பந்தழைப்ப அறிவுறுத்தும் என்று புலப்படுகின்றது. சங்க நூற் பயிற்சியும், அடியார் அருளிய அருநூற் புலமையுமுடைய பண்டித ஸ்ரீமாந். ச. கந்தைய பிள்ளை அவர்கள் ஆசிரியரா யமைந்தமை மிகப்பொருத்தமாகும். ஆயின் பொருளும் அன்பும் அவ் வித்தக வளர்ச்சிக்கு இன்றியமையாதனவே! அவற்றைத் தமிழகப் பெரியார் அளித்துக் கரமிசைச் கொண்டு வரநெறி நாடவேண்டும் என்பதே எனது வேண்டுகோள். திருவருள் துணைபுரிவதாக. சுபமஸ்து

வ. மு. இரத்திநேசுவரையர்.

குறிப்பு:— மேற்கண்ட திருமுகம் இராமநாதபுரத்தைச் சார்ந்த ஆவினிப் பட்டி விவேகாநந்தர் கல்விக் கழகத்து ஆசிரியரும் தமிழ்ப் பண்டிதருமாகிய ப்ரஹ்மஸ்ரீ வ. மு. இரத்திநேசுவரையர் அவர்களால் எமக்கனுப்பப்பட்டது. "வித்தகம்" எனும் எமது பத்திரிகைக்கு ஆசிரியராகப் போந்த சைவத்திருவாளர் ச. கந்தைய பிள்ளை அவர்களின் நீர்மையை நன்கறிந்தவரும் பத்திரிகைக்கு ஆசி கூறியவருமான இப்பெரியார்க்கு எமது வாய்மையான வணக்கத்தை மிகப்பணிவுடன் தெரிவிக்கின்றேம். [ப—ர்]

தலையாய அறம்

[6-ம் வாரத்தொடர்ச்சி.]

தமது எண்ணங்கள் பூர்த்தியடைதற்குத்தடையாயுள்ள முன்னிலைக் கோரணிகளால் இளைப்படையாது, சோம்பலின்றி மதிவைராக்கியத்தோடு முயல்பவர், அக்கோரணிவடிவமான ஊழையும் வென்று தமது எண்ணங்கள் பூர்த்தியடையப்பெறுவர் என்பது இதன் பொருளாகும். மதிவினையாகிய புதுவினையால் விதிவினையாகிய பழவினையை வெல்லுதல்—விதியை மதியால் வெல்லுதல் என்பது இதுவேயாகும். இதனால் முன்னின்ற சடமாகிய அசுத்தமாயா சரீரம் பிணமாய் விழ உயிர் மற்றோர் சரீரத்தைப் பற்றாது அவ்வுடலுயிர் அசுத்தம் நீங்கி ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடையும் என்க. இதற்குப் புதுவினையாகிய மதிமுயற்சி முன்னிற்க வேண்டும். முயற்சி இன்றி ஒன்றும் கைகூடாது—முடியாது. மதிமுயற்சி என்றால் என்னை? அதுதான் குருநெறியைக் கடைப்பிடித்து ஐம்புலத்தாறு ஓம்புதற்கண் உள்ள மதிவைராக்கியமாகும்.

"தெய்வத்தாலாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலிதரும்"

என்னும் தெய்வப் புலவர் திருவாக்கும் இவ் அரிய பெரிய உண்மையையே உணர்த்தி நின்றது. தெய்வம் என்னும் ஊழ் ஊழ் என்னும் இருவினை இருவினை சொரூபமாகிய முன்னிலைகள் நமது எண்ணம் பூர்த்தி யடைதற்குத் தடையாயுள்ளன என்பதும், மதிவைராக்கியத்தோடு மெய்வருந்தி முயல்வதால் அத்தடைகளை அறுத்து எண்ணியவாறு பயனை அடையலாம் என்பதும் இத்திருவாக்கால் நன்கு பெறப்படுதல் கண்டு கொள்க. முன்னிலையாகிய உலகமே நமக்குப்பகை. சரீரமும் அத்தன்மைத்தே. ஆதலால் பகையை நட்பாக்கிக் கொள்ளவேண்டும்.

"பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்
தகைமைக்கட் டங்கிற்றுலகு"

என்பது தேவர் வாக்கு. ஆலகாலமாகிய முன்னிலையைநிறைமுறையோடு தழுவியே அமுதமாக்கவேண்டும். இதுசொல்வதற்குஎளிது. செய்வதற்கோ மிகஅரிது. தன்னிலை-முன்னிலை-காதலித்து ஒன்றுபடுதலே வாய்மையான சந்திவந்தனம் (சந்தியாவந்தனம்) பகலின் ஈறும் இரவின் ஆதியும் சந்திக்கும் இடம்சந்தி வந்தனம்-பகல் இரவு என்னும் இருவினையும் ஒப்பிய இடம் — மலபரிபாகம்—சமபாகம் பெற்ற இடம் என்க. தன்னிலை அமலமடையவே முன்னிலையும் அமலமாகித்தோன்றும். "ஸர்வம் பிரமமயம்" என்னும் வேதவுண்மை உறுதி பெறும். பின் அம்முன்னிலை வினைவடிவாய் நின்று துன்புறுத்தாது. இவற்றால் தன்னிலையே முன்னிலை என்பது நன்கு பெறப்படுகின்றது. இவை ஒன்றாகப் பெற்றவனே "ஞானி" எனப்படுவன். நான் + நீ = ஞானி (நான்-தன்னிலை, நீ-முன்னிலை நகரம் ஞகரமாயிற்று. நயம் ஞயம் என்று ஆயதுபோல.) தன்னிலை முன்னிலை ஒன்றுதல் பற்றியே வினைரூபமாகிய முன்னிலை முன்னிலையாகிய "தெய்வம்" "தான்" எனப்பட்டது.

ஆதலால் தெய்வம் என்பது எங்கேயோ வெகுதூரத்தில் இருப்பது எனக் கையைத் தூக்கி வானத்தைச் சுட்டிக் காட்டுவதும், கயிலை வைகுண்டம் முதலிய ஊர்களில் இருப்பது எனக்கருதி அமைவதும் மிக்க கீழ்நிறைப் பொலிவுடைய அபக்குவிகள் கொள்கையே என்பது சொல்லாமலே அமையும்.

விருந்து:— விருந்து என்பது உணவு. அஃது அறுசுவை உண்டியாகிய அன்னம் எனப்படும். அன்னம் = உண்ணப்படுவது பஞ்சேந்திரிய நுகர்ச்சியாவும் அன்னமே எனினும் எல்லா நுகர்ச்சிக்கும் மூலகாரணம் அறுசுவை யுண்டியே என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்தமையால், அவ் அன்னமே ஈண்டு விருந்து என்பதனால் குறிக்கப்பட்ட உணவாகும். "அறுசுவை யுண்டி யமர்ந்தில்லாள் ஊட்ட" என்றார் பிறரும். (நாலடியார்) உணவு என்னும் அன்னம் அளவோடு - நிறையோடு எவ்வாறு பஞ்சீகரணிக்கப்பட வேண்டுமோ அவ்வாறு பஞ்சீகரணித்து—சமைத்து அருந்தப்பட்டால் பிணி மூப்புச் சாக்காடு என்பனவற்றை அகற்றும் என்பர் வித்தகர் எனும் சித்தர் "கற்பம் சாப்பிடுதல்" எனவிதந்து கூறப்படுவது இதுவே என்க. வியாபகம் அனைத்தும் நஞ்சாகும். நஞ்சு எனின் நிறைமுறைதழுவிஒழுதமிடத்து அதுவே மருந்தாகும் "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பர். அன்னம் மருந்து என்பது "ஆகிரையிட்டனன் ஆருயிர் மருந்து" (மணிமேகலை) என்பதனாலும் அறியப்படும். "உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே, உண்டி முதற்றே உணவின் பிண்டம், உணவெனப்படுவது நிலத்தொடு நீரே" (புறம்) எனப்பிறர் கூறியதும் அறிக. திருக்குறளில் "மருந்து" என்னும் அதிகாரத்தில் தேவர் முக்கியமாக உணவையே கூறியதும் அறிக. பக்குவியானவன் பூதியநிறையாகிய கர்மத்துக்கு ஏற்பச் சரீரநிறை அறிந்து ஆசான் அருள்வதுபோல வழுவின்றி ஒழுகி வரவர, பௌதிகங்கள் தூய்மையடையும். இத்தூல கற்பம் உண்டு பூதியத்தூய்மை அடைந்தவரே ஆறறிவு பூரணம் பெற்ற மானிடராவர். இம்மானிடரே எம்பெருமான் திருவடி எனப்படும்நாதவேதமாகிய சூக்குமகற்பம் உண்ணு அருகராவர். சூக்கும கற்பத்தால் உடலுயிர் பூரண அமலமடைந்து நித்தியத்துவம் பெறும். பல பிறபுக்களுக்கு வித்தாய் விளங்கும் அவாவினால் கண்டதை யெல்லாம்—இச்சைப்பட்டதையெல்லாம் அளவும் இனமும் அறியாது உண்பதனால் சரீரத்துள்ள சுத்த அணுக்கள் ஒவ்வொன்றாகக் கெட்டுக் காமம் கோபம் முதலிய தீய குணங்கட்குக் காரணமாய்ச் சாதலடைதற் கேற்ற அசுத்த நிறையே பெருக்கமுற்று அச்சரீரம் பிணி மூப்புக்களால் பிணமாகிவிழ, பிறவிநெறியே உளதாகும் என்க. அளவும் இனமும் அறிந்து உண்பார்க்குப் பிணி மூப்புச் சாக்காடுகள் உளவாகா என்பதனைப் பின் வரும் பிரமாணங்கள் நன்குபுலப்படுத்தும்.

"பூர்துருத்தி பூர்துருத்தி என்பீராகில்'
பொல்லாத புலாற்றுருத்தி போக்கலாமே"
(அப்பர் தேவாரம் பலவகைத் திருத்தாண்டகம் செ. 1.).

திருக்குறள்

மருந்து

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்
கருந்திய தற்றது போற்றியுணின்

அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடி துய்க்கு மாறு.

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண் [ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு.

மகாத்மா காந்தி

புதுவை விஜயம்.

நிகழ்ச்சி விவரம்.

புதுச்சேரி விஜயம். 9—2—34.

சாப்பாடு	காலை	5-10—6-30
உபசாரம்	,,	6-30—7-0
ஓய்வு	,,	7-0 —9-0
காரில்புறப்பாடு	,,	9-0

வழியில் கூடலூரில்
10 நிமஷம் தாமதம்.

காந்தியடிகள் ஈண்டு விஜயம் செய்வதற்கு காரணம் யாதெனில் ஹரிஜன சேவா சங்கத்தார் வேண்டுகோளுக்கிணங்கி இப்புதுவையில்சுமார் 4-மணி நேரம் தாமதிக்கப் போவதாக தெரிகிறது.

(மாறுபாடில்லாத உண்டி—சரீர பௌதிக நிலைக்குப் பொருத்தமான — இனமான உணவு. மறந்து உண்ணல்—அவாவினால் சேர்ந்தவாறு உண்ண முயலும் இச்சையை மாற்றி பவரோக வைத்தியனாகிய குருநாதன் அருளிய நிலையைக் கடைப்பிடித்துப் பத்தியமாக உண்ணல். உயிர்க்கு ஊறுபாடும்—சாக்காடு)

"மெய்யுறு பிணிக்கு விலக்குவ தொழித்து
[விதித்தன கொள்ளுவன் பிறவி

மையுறு பிணிக்கு மவ்வகை கொளாமல்
வருந்துமக் கோயிடைப் படுவேன்....

(பெருங்கழி நெடில்)

எனச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறியதும் அறிக. நிறைமுறையோடு உணவு கொள்ளும் ஆற்றலில்லாதார் திருவருளுட்டம் வகித்தற்கு அருகராகார் என்பது பின் வரும் ஞானசம்பந்தப்பெருமான் திருவாக்கானும் வலியுறுத்தப்பட்டது.

பலனமாய்ச் சோடையாய் நாவெழாப்
[பஞ்சிநோய் சட்டவுண்டு

சிவனதான் சிந்தியாப் பேதைமார்போல
[நீ வென்னெயே.

(திருவாரூர்—பண் காந்தாரம் செ. 1.)

குருநெறிகடைப் பிடித்து மதி வைராக்கியத்தோடு முன்னிலை ஆகாரங்களைப் பத்தியமாக உண்டு புதியத்தூய்மை

திருப நேயர்கட்கு அறிவிப்பு.

---

1. பிழையின்றி நல்ல மையினால் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

2. வருங் கடிதங்களை, கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாது விடவும் கூடும்.

3. பிரசுரிக்கப்படாத கடிதங்கள், கட்டுரைகள் திருப்பி யனுப்பப்படமாட்டா.

4. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்கு கடிதக்காரர்களே பொருப்பாளிகளாவர்.

மானேஜர்
"வித்தகம்"
வித்தக நிலையம்
புதுச்சேரி.
(Fr. India.)

"வித்தகம்"

வருட சந்தா விவரம்.

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ.3-0-0
மலாயா, சிங்கபூர், சைகோன் ரூ.4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

ஏஜண்டுகள் தேவை

எமது "வித்தகம்" என்கிற வாரப் பத்திரிகையை விற்பனை செய்ய ஒவ்வொரு ஊரிலும் தக்க ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

"வித்தகம்"
புதுச்சேரி.

அடையவேண்டுதலானும், பக்குவத்துக்கு ஏற்றவாறே முன்னிலை அமைதலானும் "விருத்த" "தான்" எனப்பட்டது. இத்தகைய வாய்மையான விருந்தோம்பலால் தன்னிலை தூய்மையடையவே முன்னிலை தன்னிலைகள் ஒன்றுகும் என்க.

(தொடரும்.)

சுக்ரன் சனிக்கு கிரஹணம்.

ஜெப்பானில் அபூர்வமான காட்சி.

இன்று பிற்பகல் ஆகாயத்தில் மேகஸஞ்சார மேயில்லாத சமயத்தில் சந்திரனானது சுக்கிரனையும், சனியையும் மறைத்து விட்டது. ஒவ்வொன்றும் ஒரு மணிநேரம் மறைந்திருந்தது. பல ஆயிரம் வருஷங்களுக்கு ஒரு தடவையே இம் மாதிரி நிகழுமாம்.

இனம்! இனம்!!

குடும்பத் திறவுகோல்

எனும் ஓர் அரிய நூல் வாங்குபவர்கட்கு, கண்ணைக்கவரும் சினிமா ஸ்டார் சுபேதா டிராமா ராணிகள் T. M. சாரதாம்பாள், P. S. சிவபாக்கியம் இவர்களுடைய ஆப்டோன் பிளாக்குகளுடன் பல கலர்களில் அச்சிட்டுள்ள ஓர் அழகிய

1934ஆ காலண்டர் இனம்!!!

இந்நூலில் "தாய் தந்தை தனயன், கணவன் மனைவி, சகோதரர்கள், மாமி மருகி முதலியவர்களுடைய கடமைகளைப் பற்றி விவரித்து நாவல்ரூபமாகச் சித்திரப் படங்களுடன் விளக்கப்பட்டிருக்கிறது.

பல அழகிய சித்திரப்படங்களுடன் 102 பக்கங்களோடு சுத்தமான காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

S. I. நாதன் 3, அருளப்ப நாய்க்கன் தெரு
மைலாப்பூர், சென்னை

பிராஞ்சு:— S. சுந்தரம்
55, சின்னவாய்க்கால் வீதி, புதுவை.

"வித்தகம்"

விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் அங்குலம் 1-க்கு
ரூ. 0—8—0

கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1க்கு
ரூ. 1—0—0.

☞ நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.

வித்தக நிலையம்
புதுச்சேரி.
(Fr. India)

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant R. Nagarattinam.